

காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவையடுத்து, அவர் வாழ்ந்த மணப்பாக்கம் வீட்டில் வைக்கப்பட்டுள்ள அவருடைய உடலுக்கு வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும், காங்கிரஸ் கட்சியினருக்கும், அவருடைய மனைவி வரலட்சுமி இளங்கோவன், மகன் ஈ.வி.கே.எஸ்.சஞ்சய் சம்பத், பேத்தி சமந்தா திருமகன், ஆகியோருக்கும் ஆறுதல் கூறினார். காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ, துணைத் தலைவர் குலாம் மொய்தீன், காஞ்சிபுரம் காங்கிரஸ் மாவட்ட முன்னாள் சிவராமன், விழுப்புரம் மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் ஆறுமுகம், முபாரக், அகமது, பாலசுப்ரமணியன், நாஞ்சில் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்



தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் மறைவையொட்டி அவரது உடலுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

# மலட்டாற்றின் இரு புறங்களிலும் கரையை உயர்த்திடுக!

## பேரவையில் ஏ.ஜெ.மணிக்கண்ணன் கோரிக்கை!



சென்னை, டிச. 16-

மலட்டாற்றின் இரு புறங்களிலும் கரையை உயர்த்திட வேண்டும் என்று பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் கோரிக்கை விடுத்தார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-

**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** பெண்ணையாற்றிலிருந்து கூடுதலாக உபரிநீர் வரும் போது மலட்டாற்றில் திறந்துவிடுகிறார்கள். மலட்டாற்றில் பெருமளவு நீர் நிரம்பினால், என்னுடைய தொகுதியில் மட்டும் 11 கிராமங்கள் பாதிப்படைந்துள்ளன. மலட்டாற்றில் இருபுறங்களிலும் சுத்தமாக கரைகள் இல்லாமல் இருக்கின்றன. அந்தக் கரைகளை பலப்படுத்த வேண்டும். தண்ணீர் வீடுகளில் புகுவதால் நிறைய பாதிப்படைந்துள்ளன. அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரிலும், துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரிலும், பொறுப்பு அமைச்சர் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களோடு சேர்ந்து மழையால் பாதிக்கப்பட்ட மக்களையெல்லாம் பாதுகாக்கக்கூடிய பணியை சிறப்பாக மேற்கொண்டோம். தொடர்ந்து மக்கள் மீண்டும் பாதிக்காதவகையில் ஆற்றின் கரைகளைச் சீரமைத்துத் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** வெள்ளப்பெருக்கு காரணமாக எங்கெங்கு எல்லாம் சேதாரம் ஏற்பட்டதோ, அங்கேயெல்லாம் உடனடியாக தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் செப்பனிடுவதற்கு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான கணக்குகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 40 முதல் 50 இன்ஜினியர்கள் எல்லா இடங்களில் சென்று ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கை தேவையின் அடிப்படையில் உடனே செய்ய வேண்டியதாக இருந்தால் அரசாங்கம் கவனிக்கும்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் மணிமுத்தா ஆற்றில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு ஆற்றங்கறை ஓரம் குடியிருக்கும் வீடுகள் மழை நீரால் சேதம் ஆகிவிட்டது. தகவல் அறிந்ததும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் நேரில் பார்வையிட்டு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினார்.ஆற்றங்கறை ஓரம் குடியிருக்கும் பொது மக்களுக்கு மாற்று இடத்தில் குடியிருக்கும் வகையில் பட்டா வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன், நகர கழக செயலாளர் தண்டபாணி, நகர மன்ற தலைவர் டாக்டர்.சங்கவி முருகதாஸ், ஒன்றிய கழக செயலாளர்கள் கனக. கோவிந்தசாமி, கோட்டேரி பழனி சுரேஷ், ஆசைத்தம்பி, விருத்தாசலம் நகர கழக துணை செயலாளர் எஸ். இராமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்

# முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் தாயார் எஸ்.மரகதம் அம்மையார் மறைவு!

## அமைச்சர் - மாவட்டச் செயலாளர்கள் எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் – கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி!



தஞ்சாவூர் டிச.16-

முன்னாள் ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எஸ்.எஸ் சங்கரவடிவேல், எஸ்.எஸ். ராஜ்குமார், ஆகியோரின் தாயாருமான எஸ்.மரகதம் அம்மாள் (95) வயது முதிர்வின் காரணமாக 14.12.2024 சனிக்கிழமை நள்ளிரவு 11.00 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அம்மையாரின் மறைவுச் செய்தியறிந்த உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டிகே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், தஞ்சை மாநகர மேயர் சண்.இராமநாதன், துணை மேயர்கள் சு.ப.தமிழழகன், மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை தலைவர் எஸ்.கே.முத்துசெல்வம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாரது இறுதி ஊர்வலம் தஞ்சாவூர் சீனிவாசபுரம் இல்லத்திலிருந்து நேற்று (15.12.24) மாலை 4 மணிக்கு புறப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

## மழைநீர் ஊருக்குள் புகுந்து வீடுகள் – விளை நிலங்கள் பாதிப்பு!

# துறையூர் தொகுதியில் வாய்க்கால் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் செ. ஸ்டாலின் குமார் வலியுறுத்தல்!



சென்னை, டிச. 16-

சட்டப்பேரவையில் துறையூர் தொகுதி கழக உறுப்பினர் செ. ஸ்டாலின் குமார் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:-

**செ. ஸ்டாலின் குமார்:** என்னுடைய துறையூர் தொகுதியில் பச்சை மலையில், கடந்த வாரம் பெய்த மழையின் காரணமாக செங்காட்டுப்பட்டி, கீரம்பூர், துறையூர் பெரிய ஏரி, துறையூர் சின்ன ஏரி, சித்திரப்பட்டி, சிங்களந்த புரம், மாதனூர், தவிட்டுப்பட்டி, கட்டனாம்பட்டி, நல்லியம்பட்டி, செல்லிப் பாளையம், மருவத்தூர், கிருஷ்ணாபுரம், சிக்கந்தாபூர், கோவிந்தாபுரம், முறுவூர் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் மழைநீர் ஊருக்குள் புகுந்து, விவசாய நிலங்களும், வீடுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து இந்த வாய்க்கால் தூர்வாரப்படாமல் இருக்கிறது. எனவே, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த வாரம் எங்களுடைய தொகுதி மக்கள் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாக சென்று விளைநிலங்களும், வெங்காயமும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தங்களுடைய கோரிக்கையை சொல்லியிருக்கிறார்கள். எனவே, நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக இந்த வாய்க்காலைத் தூர்வாரி நிறைய இடங்களில் அந்த கரைகள் உடைந்து விவசாய நிலங்களிலும், வீடுகளிலும் தண்ணீர் புகுந்துள்ளது. எனவே, நிரந்தரத் தீர்வு காண்பதற்காக நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர்கள் கூறிய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்ற தமிழக அரசு தான் அதிகப்படியான நிதியை ஒதுக்க வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் இதை கேட்டுக்கொண்டிருக்கிறார். மிகவும் கனிவுள்ள ஒரு நிதியமைச்சர். இதை கருணையோடு கவனித்து இந்த ஆண்டு எனக்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று உங்கள் சார்பாக அவரை நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பதிலளித்தார்.

# 6 வழித்தடங்களில் மகளிருக்கான விடியல் பயண திட்டம் தொடக்கம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி துவக்கி வைத்தார்!

நாமக்கல் டிச. 16-

நாமக்கல் மாநகராட்சி, பழைய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 6 விரைவு நகர பேருந்துகளை மகளிர் விடியல் பயணம் பேருந்துகளாக மாற்றி அமைத்து, மகளிர் விடியல் பயண சேவை துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ. ராமலிங்கம், சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி, மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு LSS பேருந்துகளாக இயங்கி வந்த 6 பேருந்துகளை மகளிர் விடியல் பயண சேவையாக மாற்றி அமைத்து, பேருந்து வழித்தடங்களுக்கு துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சாதாரண கட்டண பேருந்துகளில் மகளிர் விடியல் பயணத் திட்டம் 07.05.2021 முதல் தொடங்கப்பட்டு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் சாதாரண கட்டண பேருந்துகளில் மகளிர் சுமார் 72 சதவிகிதம் பயணங்கள் மேற்கொண்டுள்ளனர். மேலும், நகரப் பேருந்துகளில் மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ், நாள் ஒன்றுக்கு 124 சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் 1,70,027 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதில் சுமார் 1,22,710 மகளிர் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில் ஏற்கனவே இயக்கப்பட்டு வந்த 124 பேருந்துகளுடன் கூடுதலாக 6 பேருந்துகள் என மொத்தம் 130 பேருந்துகள் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துகளாக இயக்கப்பட்டுள்ளது.

தற்போதைய போக்குவரத்து நெரிசல் மற்றும் வாகன ஓட்டிகளின் போக்குவரத்து சிரமங்களை போக்கிடும் வகையில் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில், நாமக்கல் மாவட்டத்தில் புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு பேருந்து சேவை தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் இன்றியமையாத தொழில் கோழிப் பண்ணை தொழில் ஆகும். நாமக்கல் மாவட்டத்திலிருந்து வளைகுடா நாடுகளுக்கு கோழி முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. கத்தார் நாட்டில் முட்டை இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டி ருந்தது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் தற்போது ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்திடம் கத்தார் நாட்டில் முட்டை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுபாடுகளை தளர்வு செய்திட கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டுப் ப்பாடுகள் நீக்கப்பட்டு முட்டை ஏற்றுமதி மேற்கொள்ளப்படும்.

இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டம் சார்பில், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பழைய பேருந்து நிலையத்தில் LSS ஆக இயக்கப்பட்டு வந்த 6 நகர பேருந்துகள் மகளிர் விடியல் பயணம் பேருந்துகளாக மாற்றம் செய்து பேருந்து சேவையை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் நாமக்கல் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இராசிபுரம் வரை 3 நகர பேருந்துகளும், நாமக்கல் பழைய பேருந்து நிலையம் வேலூருக்கு 2 நகர பேருந்துகளும், நாமக்கல் பழைய பேருந்து நிலையம் முதல் காட்டுப்புத்தூர், வேலூர் 1 நகரப் பேருந்து என 6 பேருந்துகளின் இயக்கப்படும். இதன் மூலம் பயணிகள் தங்குதடையின்றி பேருந்து போக்குவரத்து மேற்கொள்ள முடியும். இப்பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணம் மேற்கொள்ளலாம். பொதுமக்களின் போக்குவரத்து தேவைகளை நிறைவேற்றிடும் வகையில் தொடர்ந்து அரசின சார்பில் புதிய சேவைகள் நிறை வேற்றப்பட்டு வருகிறது என கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் செ.பூபதி, நாமக்கல் நகர செயலாளர்கள் தெற்கு ராணா ஆனந்த், மேற்கு சிவக்குமார், ஒன்றிய செயலாளர் நவலடி, மாநகராட்சி ஆணையாளர் ரா.மகேஸ்வரி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் ப.செங்கோட்டுவேலன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிகள், தொழிற் சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் – தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் அருகே உள்ள புத்தேந்தல் கிராமத்தில் அமைந்துள்ள ஆதரவு அற்றோர் இல்லத்தில் உணவும் மற்றும் புதிய உடைகளை மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்,எல். ஏ. வழங்கினார். உடன் மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் பெருநாழி வி.போஸ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வி.மணிமாறன், மாவட்ட தலைவர், மிசா அ.வே. அரவரசன், மாவட்டத் துணைத் தலைவர் தஸ்லீம் காஜா, துணை அமைப்பாளர்கள் நா.அப்துல் பாசித்,ரா.பத்மநாதன், ஏ.நம்பு ராஜன், ரே . மணிகண்டன், முனியசாமி என்ற பெரியாள், ஹரி முருகன், ஜே நிறைபாண்டி.மற்றும் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர் கே கார்மேகம், துணை தலைவர் பிரவீன் தங்கம், மற்றும் அப்துல் பாசித் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர், நாகூர் கனி மாவட்ட, விவசாய அணி துணை அமைப்பாளர், மாவட்ட மகளிர் அணி தொண்டர் அணி அமைப்பாளர் அமிர்தவல்லி, உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கடமலை மயிலை ஒன்றியம் ஆத்தங்கரை பட்டியில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன், ஒன்றிய குழு தலைவர் சித்ராசுரேஷ் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் உத்தமபாளையம் ஊராட்சியில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. புதிய ஊராட்சி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இதில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் அணைப்பட்டி முருகேசன் மற்றும் கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.